தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விகாரி, பங்குனி 11, திருவள்ளுவர் ஆண்டு—2051

2020 மார்ச் 24, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.”

ஆட்சியாளர் தன் நாட்டில் உள்ள மக்கள் அனைவரையும் பேணிப் பாதுகாப்பார். அவரை, நீதி நெறி தவறாத அவரது நல்லாட்சியானது காப்பாற்றும்.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) கொரோனா வைரஸ் நோய், வாழ்வாதாரம் பாதிக்கப்படுவோருக்கு சிறப்பு நிவாரண உதவி அளித்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் நோய்த் தொற்றைத் தடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, தொடர்ந்து தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

நேற்று 23–3–2020 அன்று தனிமைப்படுத்துதல் என்ற முறையை தீவிரப்படுத்த நான் பல்வேறு அறிவிப்புகளை இந்த அவையில் வெளியிட்டேன். அவற்றிற்கிணங்க, நேற்று மாலை விரிவான அறிவிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. மேலும், அந்த உத்தரவுகளை நடைமுறைப்படுத்த குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம், பிரிவு 144–ன்கீழ், சென்னையில் காவல் ஆணையர் அவர்களும், பிற மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் உரிய உத்தரவுகளைப் பிறப்பிக்க உள்ளார்கள். இவ்வாணைகள் அனைத்தும் இன்று (24–3–2020) மாலை 6 மணி முதல் அமலுக்கு வருகின்றன.

இதனால் தினக் கூலிகள், விவசாயக் கூலிகள், ஆட்டோ ஓட்டுநர்கள், டாக்ஸி ஓட்டுநர்கள், கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள், நடைபாதை வியாபாரிகள், முதியோர்கள் உள்ளிட்ட பொது மக்களின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஏழை, எளிய மக்களின் சிரமங்களை உணர்ந்து, அவர்களுக்கு தகுந்த நிவாரணம் வழங்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்து, 3,280 கோடி ரூபாய் மதிப்பிலான பின்வரும் சிறப்பு நிவாரண உதவிகளை வழங்க (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஆணையிடுகிறேன்:

1. அனைத்து குடும்ப அரிசி அட்டைதாரர்களுக்கும் 1,000/– ரூபாய் நிவாரணமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களுக்கு உரித்தான ஏப்ரல் மாதத்திற்கான அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பொது விநியோகக் கடைகளில் கூட்டத்தைத் தவிர்க்க இந்நிவாரணம் டோக்கன் முறையில், ஒதுக்கப்பட்ட நாளிலும், நேரத்திலும் விநியோகிக்கப்படும். இந்த 1,000/– ரூபாய் நிவாரணம் மற்றும் விலையில்லாப் பொருட்களை பெற விருப்பம் இல்லாதவர்கள், இதற்கான வலைதளத்தில் மின்னணு முறையில் அல்லது செயலியில் பதிவு செய்துகொள்ளலாம்.

2. குடும்ப அட்டைதாரர்கள் மார்ச் மாதத்திற்கான ரேஷன் பொருட்களை வாங்க தவறியிருப்பின், ஏப்ரல் மாதத்திற்கான பொருட்களுடன் சேர்த்து வாங்கிக் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கட்டடத் தொழிலாளர்கள் மற்றும் ஓட்டுநர் நல வாரியத்தில் உள்ள ஆட்டோ தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு சிறப்புத்

2020 மார்ச் 24] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தொகுப்பாக தலா 1,000/– ரூபாயும் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் 15 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு, ஒரு கிலோ சமையல் எண்ணெய்யும் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தற்போது தமிழ்நாட்டில் சிக்கித் தவிக்கும் பிற மாநிலங்களைச் சேர்ந்த கட்டுமான மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களை, மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் தொழிலாளர் வாரியங்கள் அடையாளம் கண்டு, அவர்களின் குடும்பம் ஒன்றுக்கு 15 கிலோ அரிசி, ஒரு கிலோ பருப்பு மற்றும் ஒரு கிலோ சமையல் எண்ணெய் இலவசமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அம்மா உணவகத்தின் மூலமாக சூடான, சுகாதாரமான உணவு தொடர்ந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. எந்த வசதியும் இல்லாதோர், ஆதரவற்றோர் போன்றவர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடத்திலேயே, சூடான, சுகாதாரமான முறையில் உணவு தயாரித்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென தேவைக்கேற்ப பொது சமையல் கூடங்கள் அமைக்க சென்னை மாநகர ஆணையருக்கும், பிற மாவட்ட ஆட்சியர்களுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

7. அங்கன்வாடி மையங்களில் உணவருந்தும் முதியோர்களுக்கு தேவையான உணவினை, அவர்கள் வசிக்கும் இடங்களில் வழங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. பதிவு செய்யப்பட்ட நடைபாதை வியாபாரிகளுக்கு பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் 1,000/– ரூபாயுடன் கூடுதலாக 1,000/– ரூபாய் நிவாரணத் தொகையாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், இந்த மாதத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு, 2 நாட்களுக்கான ஊதியம், சிறப்பு ஊதியமாக அவற்றோடு கூடுதலாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் பின்வரும் அறிவிப்புகளை அளிக்க நான் அனுமதி கோருகிறேன்.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2020 மார்ச் 24

செய்தித் துறையில் 3 அறிவிப்புகள், தொழில் துறையில் 6 அறிவிப்புகள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையில் 3 அறிவிப்புகள், பால் வளத் துறையில் 5 அறிவிப்புகள், வேளாண்மைத் துறையில் 19 அறிவிப்புகள், தகவல் தொழில்நுட்பத் துறையில் 2 அறிவிப்புகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் 7 அறிவிப்புகள், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் 6 அறிவிப்புகள், தமிழ் வளர்ச்சித் துறையில் 1 அறிவிப்பு, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் 6 அறிவிப்புகள், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையில் 23 அறிவிப்புகள், உயர் கல்வித் துறையில் 1 அறிவிப்பு. மொத்தம் 82 அறிவிப்புகள். மேற்குறிப்பிட்ட அறிவிப்புகளின் விவரங்களை நான் ஏற்கெனவே தங்களிடம் அளித்துள்ளேன். அவை அனைத்தையும் இந்த அவையில் நான் படித்ததாக ஏற்று அவைக் குறிப்பில் பதிவுசெய்துகொள்ளுமாறு தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டவாறு மீதமுள்ள அறிவிப்புகள் படித்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படுகின்றன என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) தூத்துக்குடி மாவட்டம், வல்லநாட்டில் சுதந்திரப் போராட்ட வீரர் வெள்ளையத் தேவன் மணிமண்டபத்தில் அன்னாரின் சிலை அமைத்தல், பத்திரிகையாளர்களுக்கு மருத்துவ நிதியுதவி உயர்த்துதல் மற்றும் "மக்களின் தந்தை" திரு. ராவ் பகதூர் குரூஸ் பர்ணாந்தீஸ் பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல் குறித்த செய்தித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டின் சுதந்திரத்திற்காகவும், நமது மாநிலம் மற்றும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும், சமுதாய மேம்பாட்டிற்காகவும் பாடுபட்டவர்களைச் சிறப்பிக்கும் வகையிலும், அவர்களின் தியாகங்களை வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளவும், மணிமண்டபங்கள், நினைவிடங்கள், நினைவு இல்லங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை மாண்புமிகு அம்மாவின் அரசு உருவாக்கி, பராமரித்து வருகிறது. அதன் தொடர்ச்சியாக,

1. வீரபாண்டிய கட்டபொம்மன் தன் தளபதியாக மட்டுமல்லாமல், மகனாகவும் நினைத்துப் போற்றிய, திருநெல்வேலி